1972 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவரை பரிசுச் சீட்டின் மூலமாக அரசுக்குக் கிடைத்த தொகை 12½ கோடி ரூபாய்.

Cattle nuisance in Madras

*36 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to meet the cattle nuisance in Madras City?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பராரியாய்த் திரியும் கால்நடைகள் வளைத்துப் பிடிக்கப்பட்டு, சென்னை மாநகரில் பல்வேறு காவல் நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ள கால்நடைப் பட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சென்னை மாநகர் காவல் துறைச் சட்டத்தின் 71-வது பிரிவின் (IX) பகுதியின் கீழ், கால்நடை உரிமையாளர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்படுகிற கால்நடை உரிமையாளர்கள் அபராதம் விதிக்கப்படுகின்றனர்.

திரு. என். டென்னிஸ்: இதன் தொல்லையைப் போக்க கடுமையான நடவடிக்கை அடங்கிய சட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது விதிக்கப்படுகிற அபராதத் தொகை 50 பைசா, ஒரு ரூபாய் என்றுதான் இருக்கிறது. அதை 3 ரூபாய், 5 ரூபாய் என்று அதிகப்படுத்த திருத்தம் கொண்டுவரலாமா என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: இந்தக் கால்நடைத் தொல்லையைப் போக்குவதற்கு சென்னை நகரத்தில் யாரும் கால்நடை வைத்துக் கொள்ளக் கூடாது என்பதாக சட்டம் கொண்டு வர அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரும் உத்தேசம் எதுவும் இல்லை. ஆனால் சில கால்நடைகள் கேட்பாரற்று—வளர்ப்பாரற்று—பட்டிகளில் அடைத்தாலும் விடுவித்துக்கொண்டு போவதற்கு யாரும் வராத முறையில் அனாதைகளாக அடைபட்டுக்கிடக்கிற நிலை இருக்கிறது. இது போன்ற கால்நடைகளை சென்னையில் உள்ள பண்ணைகளில் விட்டு விடலாமா என்கிற யோசனை அரசுக்கு இருந்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எஸ். பி. ஸி. ஏ. மூலம், அலைந்து திரியும் கால்நடைகளைப் பராமரிக்க வேண்டிய உதவி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி : எஸ். பி. ஸி. ஏ. கால் நடைகளுக்குத் துன்பம் ஏற்படாதவாறு அதற்கேற்ற நடவடிக்கை களைத்தான் எடுத்து வருகிறது. இதுபோன்ற கால்நடைகளைப் பராமரிக்கவும் அவர்கள் யோசித்தால் அரசு அதற்கு ஆதரவு தர முன்வரும்.

Book Presentation Scheme

* 37 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the United Kingdom Government has gifted books under the "Book Presentation Scheme" during September 1971 to the State Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தென் பிராந்திய மாநிலங்களிலுள்ள நாற்பது பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கு இங்கிலாந்து அரசு நாற்பது அடுக்குப் புத்தகங்களை இலவசமாக வழங்கியுள்ளது. தமிழ் நாட்டில் 11 பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகள் (அரசினர் பள்ளிகள் 3, மானியம் பெறும் பள்ளிகள் 8) இந்த அன்பளிப்பை பெற்றன.

THIRU N. DENNIS : Sir, may I know whether any other country has gifted books under this scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டில் இங்கிலாந்து அரசிடம் இருந்து மட்டும் தொழில்நுட்பப் பள்ளி களுக்கான புத்தக அடுக்குகள் வந்தன. இதுபோல வேறு நாடுகளில் இருந்தும் புத்தகங்கள் வந்திருக்கின்றனவா என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

Development of Madras City

* 38 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the United Nations assignee to the Delhi School of Architecture, has been invited to advice the State Government for recommending improvements to Madras City.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU N. DENNIS : Sir, may I know whether any remuneration is given to him?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை யினுடைய இயற்கை அமைப்பை எழில் பொருந்தியதாக ஆக்கு வதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. போர்டு ஸ்தாபனத்தின் சார்பாக திரு. டேவின்ஸ் கின்னர் என்பவர் 13—10—1971 அன்று சென்னைக்கு வந்தபோது இதுபற்றி அவரும்